National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 14 March 2023

## செய்திக்கொத்து

# சிங்கப்பூரில் புதிய வகை சிற்றின கெளுத்தி மீன் கண்டுபிடிப்பு



சிங்கப்பூரில் ஒரே ஒரு மென்னீர் சதுப்புநிலப் பகுதிதான் இன்னமும் எஞ்சி இருக்கிறது. அதில் சேற்றில் வாழக்கூடிய ஒரு குறிப்பிட்ட வகை சிற்றினத்தைச் சேர்ந்த கெளுத்தி மீன் (படம்) அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

அறிவியல் அறிஞர்கள் 30 ஆண்டு காலம் நடத்தி வந்த ஆய்வுகளின் விளைவாக அந்தச் சிற்றினம் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அறிஞர்கள் கண்டுபிடித்துள்ள கெளுத்தி மீன் சிற்றினம் ‘என்கிளோகிளாரியாஸ் கெளியோட்ஸ்’ என்று குறிப்பிடப்படுகிறது. இது ஆசியாவில் அவ்வளவாக பிரபலமாகாத ஒன்று. இந்த வகை கெளுத்தி மீனின் உடல் நீண்டு இருக்கும். காற்றைச் சுவாசிக்கும். மீசைகள் நீளமாக இருக்கும்.

புதிய வகை கெளுத்தி சிற்றினம், மத்திய நீர்ப்பிடிப்பு இயற்கைப் பகுதியில் ஓடும் காட்டு ஓடையில் முதன்முதலாக 2022 ஆகஸ்டில் கண்டுபிடிக்கப்பட்டதாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் லீ கோங் சியான் தேசிய அறிவியல் அரும்பொருளகத்தின் அறிவியல் துறை மீன் காப்பாளர் டாக்டர் டான் ஹியோக் ஹுய் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.